செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-59 நவம்பர், 2025

தனியார்துறை வங்கி ஊழியர்கள் மாநிலமெங்கும் ஆர்ப்பாட்டம் - 14-10-2025

ஆகஸ்ட் 24 மற்றும் 25, 2025 அன்று கேரள மாநிலத்தில் ஆலுவா நகரில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்துடன் இணைந்த தனியார் துறை வங்கி தொழிற்சங்கங்களின் முதல் தேசிய மாநாட்டில், தனியார் வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய அளவிலான போராட்டம் அனுசரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.



அனைத்து தனியார் வங்கிகளையும் தேசியமயமாக்கிட வேண்டியும், CSB வங்கியில் 11வது மற்றும் 12வது இருதரப்பு ஒப்பந்தப் பலன்கள் ஊழியர்களுக்கு உடனடியாக வழங்கிட வலியுறுத்தியும், தனியார் வங்கிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு EX-GRATIA ஓய்வூதியத்தை வழங்கிடக் கோரியும், பெடரல் வங்கி நிர்வாகத்தின் ஊழியர் விரோத நடவடிக்கைகளை கைவிடக் கோரியும், TMB வங்கியில் பணியாற்றும் ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதினை 60ஆக உயர்த்திடக்கோரியும் அனைத்து C2C பணியாளர்களையும் நிரந்தர ஊழியர்களாக ஆக்கிட வலியுறுத்தியும் நடைபெற்ற முதற்கட்ட பெருந்திரள் ஆர்ப்பாட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் 14-10-2025 அன்று அனுசரிக்கப்பட்டது.





மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஏராளமான வங்கி ஊழியர்கள் கலந்துகொண்டனர். அடுத்தகட்ட நடவடிக்கையாக **03-11-2025** அன்று கரூர் வைசியா வங்கியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள கரூர் நகரில் மாபெரும் தர்ணா போராட்டம் நடைபெற உள்ளது.

பொதுத்துறை வங்கிகளில் அந்நிய முதலீட்டு வரம்பை அதிகரிக்க திட்டம்

பொதுத்துறை வங்கிகளில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை (**FDI**) அதன் தற்போதைய உச்சவரம்பான **20** சதவீதத்திலிருந்து **49** சதவீதமாக அதிகரிக்க ஒன்றிய நிதியமைச்சகம் முடிவு செய்துள்ளதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ராய்ட்டர்ஸ் அறிக்கையின்படி, நிதி அமைச்சகம் இந்த நடவடிக்கை தொடர்பாக இந்திய ரிசர்வ் வங்கியுடன் விவாதித்து வருவதாக கூறியுள்ளது.



தற்போது பொதுத்துறை வங்கிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர் உரிமை, கனரா வங்கியில் அதிகபட்சமாக சுமார் **12** சதவீதத்திலிருந்து யூகோ வங்கியில் பூஜ்ஜியம் சதவீதம் வரை உள்ளது.

சமீபத்தில் தனியார் வங்கிகள் பலவற்றில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெருமளவு பங்கினை கையகப்படுத்தும் முடிவெடுத்துள்ளனர். அந்நிய **EMIRATES NBD, RBL** வங்கியில் **60** சதவீத பங்குகளை ரூ **26,853** கோடிக்கு கையகப்படுத்தவும், சுமிடோமோ மிட்சுய் வங்கி கார்ப்பரேஷன் **(SUMITOMO MITSUI BANKING CORPORATION), YES BANK** வங்கியில் **20** சதவீத பங்குகளை ரூ **13,483** கோடிக்கு வாங்கவும் திட்டமிட்டுள்ளது.

அதேபோல், வார்பர்க் பின்கஸ் (**WARBURG PINCUS**) மற்றும் அபுதாபி முதலீட்டு ஆணையத்தின் நிதி நிறுவனங்கள் **IDFC FIRST** வங்கியில் **9.48** சதவீத பங்குகள் மற்றும் **5.10** சதவீத பங்குகளை ரூ **7,500** கோடிக்கு வாங்க திட்டமிட்டுள்ளன. அதே நேரத்தில் பிளாக்ஸ்டோன் குழும நிறுவனம் (**BLACKSTONE GROUP**) **FEDERAL** வங்கியில் **9.99** சதவீத பங்குகளை ரூ **6,196** கோடிக்கு வாங்கிட திட்டமிட்டுள்ளது.

காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை ஒன்றிய அரசாங்கம் ஏற்கனவே 74 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக உயர்த்தியுள்ளது. தற்போது, 171 இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைக் கொண்ட 12 இந்திய பொதுத்துறை வங்கிகள், நாட்டின் வங்கித் துறையில் 55 சதவீதம் பங்களிக்கின்றன.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் பொதுத்துறை வங்கிகளில் (PSBs) அந்நிய நேரடி முதலீட்டை (FDI) தொடர்ந்து எதிர்த்து போராட்டங்களை நடத்தி வருகின்றது. பொதுத்துறை வங்கிகளில் அந்நிய நேரடி முதலீட்டினை அதிகரிப்பது பொது மக்களின் சேமிப்பினை அந்நிய நாட்டு தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் மோசமான செயலாகும்.

வங்கி	FDI-%
கனரா வங்கி	11.90
பாரத ஸ்டேட் வங்கி	9.60
பரோடா வங்கி	8.70
யூனியன் வங்கி	7.90
பஞ்சாப் நேஷனல் வங்கி	5.70
இந்தியன் வங்கி	4.70
பேங்க் ஆப் இந்தியா	4.20
பேங்க் ஆப் மகாராஷ்டிரா	2.40
சென்ட்ரல் வங்கி	0.90
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	0.30
பஞ்சாப் & சிந்த் வங்கி	0.20
யூகோ வங்கி	0.00

இந்நடவடிக்கை பொது மக்கள் நலனுக்கு சேவை செய்வதற்கு, குறிப்பாக கிராமப்புறங்களில் அரசின் மக்கள் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஊறு விளைவிக்கும் செயலாகும். நாட்டின் வளர்ச்சிக்கு பொதுத்துறை வங்கிகளின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதால், வங்கித் துறையில் வெளிநாட்டு முதலீட்டு உரிமையை அதிகரிக்கும் நடவடிக்கைகள் அனைவராலும் எதிர்க்கப்பட வேண்டும்.

நாட்டு நலனுக்கு எதிரான பொதுத்துறை வங்கிகளை தனியார்மயப் படுத்தும் ஒன்றிய அரசின் இத்தகைய கொள்கைகளை எதிர்த்து அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கும் போராட்ட நடவடிக்கைகளுக்கு நம் உறுப்பினர்கள் தயாராக இருக்கவேண்டியது அவசியமாகும்.

அதிக பட்டினிக் கொடுமையை எதிர்கொள்ளும் இந்தியர்கள்
உலகளாவிய பட்டினிக் குறியீட்டில் (GHI) 102 வது இடத்தில் இந்தியா

உலக நாடுகளில், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் குழந்தை இறப்பு அடிப்படையில் பசியின் அளவை கணக்கிட மற்றும் கண்காணிக்க சர்வதேச மனிதாபிமான முகமைகளால் பயன்படுத்தப்படும் அளவீடு, உலகளாவிய பசி குறியீடு (GLOBAL HUNGER INDEX) ஆகும்.

உலகம் முழுவதும் 123 நாடுகளில் ஆய்வு செய்து, அதனடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பட்டினிக் குறியீடு (GHI) அறிக்கையில் இந்தியா 102 வது இடத்தில் பெரும் கவலைக்குரிய நாடுகளுள் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது.


உலகளாவிய இந்த அறிக்கையில் இந்தியா கடுமையான பசி, பட்டினி நெருக்கடியில் உள்ள 42 நாடுகளுள் ஒன்றாக 'கவலைக்குரிய' (SEVERE HUNGER LEVELS) பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

.

இந்தக் குறியீட்டில், இந்தியா தனது அண்டை நாடுகளான மியான்மர், இலங்கை, நேபாளம், மற்றும் வங்கதேசத்தை விட பின்தங்கி உள்ளது.

பசி, ஊட்டச்சத்து குறைபாடு பிரச்னைகள் இந்தியாவில் அதிகரிப்பு:

நடப்பாண்டுகளில் இந்தியாவில் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு கடுமையாக இருப்பதாகவும், வளர்ச்சி குன்றிய குழந்தை விகிதம் 32.9 சதவீதமாக உள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. அதே சமயம் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 2.8 சதவீதமாகவும், ஊட்டச்சத்து குறைபாடு 12 சதவீதமாகவும் உள்ளது.



இந்தப் புள்ளிவிவரங்கள் ஊட்டச்சத்து குறைபாடு, ஆரோக்கியமற்ற சூழல்கள் மற்றும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களுக்கான போதுமான அணுகல் தொடர்பான சிக்கல்களை பிரதிபலிக்கின்றன.

இந்த அவல நிலைக்கான காரணங்கள் மக்கள்தொகையில் பெரும் பகுதியினருக்கு, குறிப்பாக கிராமப்புறங்களில் வாழ்பவரிடையே, வறுமை, சமத்துவமின்மை மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துள்ளது. இந்தியா ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை அனுபவித்தாலும், அவ்வாறான நன்மைகள் அனைத்துப் பிரிவினரையும், குறிப்பாக விளிம்புநிலை சமூகங்களைச் சென்றடையவில்லை.

பொது சுகாதார உள்கட்டமைப்பு, சுத்தமான குடிநீர், சுகாதாரம் மற்றும் அடிப்படை சுகாதாரப் பராமரிப்பு ஆகியவற்றை உறுதி செய்வதற்கான திட்டமிடப்படாத அணுகுமுறை ஆகியன ஊட்டச்சத்துக் குறைபாட்டை மோசமாக அதிகரிக்கிறது.

அரசியல் மற்றும் ஆளுகை காரணிகள், பாலின சமத்துவமின்மை, பாலின அடிப்படையிலான வன்முறைகள், உணவு வளங்களின் தவறான மேலாண்மை மற்றும் பொது சுகாதாரத் திட்டங்களில் ஊட்டச்சத்து மீது போதிய கவனம் செலுத்தாதது போன்ற நிர்வாகச் சிக்கல்கள் இந்தியாவின் குறைந்த **GHI** தரவரிசைக்கு மேலும் பங்களிக்கின்றன.

இந்தியாவில் வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவை தொடர்ந்து அதிகரித்தவண்ணம் உள்ளது. அதன் காரணமாக, பட்டினியில் வாடும் மக்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஒருபுறம் வசதி படைத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் மற்றொரு புறம் பசி பட்டினியில் வாடும் ஏழை மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.



ஒன்றிய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள், மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதில் அக்கறையின்மை மற்றும் மாநிலங்களின் முன்னேற்றத்திற்கு உதவுவதில் கடைபிடிக்கும் பாரபட்சமான போக்குகளே இத்தகைய அவலத்திற்கு காரணங்களாக பார்க்கப்படுகின்றது.

அதானிக்கு உதவிட ஆயுள் காப்பீட்டுக்கழகத்தின் முப்பதாயிரம் கோடி ரூபாய் பிரபல அமெரிக்க நாளேடு வெளியிட்ட செய்தியில் அம்பலம்

இந்தியாவில் லாபகரமாக இயங்கும் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனமாக இருக்கும் ஆயுள் காப்பீட்டுக்கழகம் - **LIC**, ஒன்றிய அரசின் நிதி அமைச்சக நிர்ப்பந்தம் காரணமாக அதானி குழும நிறுவன பங்குகளில் முப்பத்து மூன்றாயிரம் கோடி ரூபாய் (சுமார் **$3.9** பில்லியன்) முதலீடு செய்ததாக அமெரிக்காவின் பிரபல நாளேடான வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

அதானி நிறுவனம் மற்றும் அதன் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெற்றிட ஏதுவாக ரூபாய் **33** ஆயிரம் கோடி ஆயுள் காப்பீட்டுக்கழகம் முதலீடு செய்ததாகவும் மத்திய நிதி அமைச்சகத்தின் தலையீட்டின் பேரில் இது நடைபெற்றதாகவும் ஒன்றிய அரசு அதிகாரிகள் கூறியதாக வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் அதானி நிறுவனம் தனது கடனை அடைத்திட ஐந்தாயிரம் கோடி ரூபாய் பத்திரம் வெளியிட்ட நிலையில், அதையும் **LIC** வாங்கியதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டு இருந்தது.



இந்திய வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறையினை (**BFSI**) நிர்வகிக்கும் நிதிச் சேவைகள் துறையின் (**DFS**) ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட செய்தி என்று வாஷிங்டன் போஸ்ட் நாளேட்டின் விசாரணை கூறுகின்றது.

அதானி குழுமம் கடன் நெருக்கடியைச் சந்தித்தபோதும், அமெரிக்க நிறுவனங்களுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டபோதும், நிதி அமைச்சகம் LICயின் முதலீடுகளை அதானி நிறுவனங்களில் விரைவுபடுத்தியதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் அதானி நிறுவனத்தின் நலனுக்காக முப்பதுகோடி ஆயுள் காப்பீட்டுக்கழக பாலிசிதாரர்களின் பணம் தவறாக பயன்படுத்தப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

LIC நிறுவனம் எவ்வாறு அதானி குழுமத்தில் முதலீடு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது என்பது பற்றி நாடாளுமன்ற பொதுக்கணக்குக் குழு முழுமையாக விசாரிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கோரியுள்ளன.

நம் தலைவர்களின் தியாக வரலாற்றினைப் போற்றி நினைவு கூர்வோம்



தியாகத்தின் திருவுருவம்
தோழர் H L பர்வானா
102 வது ஆண்டு
பிறந்த தினம்
(3-11-1923 - 2025)



AIBEA வின் கலங்கரை விளக்கம்
தோழர் பிரபாத்கார்
41 வது ஆண்டு
நினைவு தினம்
(27-11-1984 - 2025)



சம்மேளனத்தின் ஒளிவிளக்கு
தோழர் C S சுப்ரமணியன்
43 வது ஆண்டு நினைவு தினம்
(16-11-1982 -2025)

வங்கி ஊழியர் இயக்கத்தின் வழிகாட்டி தோழர் சம்பத் நினைவு நாள் - 20-11-2025

சம்மேளனத்தின் சுடரொளி
தோழர் N சம்பத்
11 வது ஆண்டு நினைவு தினம்
(20-11-2014 -2025)



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட அதே 1946ம் ஆண்டில் தோழர் சம்பத் அவர்கள் சென்னையிலுள்ள பேங்க் ஆப் இந்தியாவில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். அன்றைய காலகட்டத்தில் வங்கியில் பணிபுரிந்த ஊழியர்களின் அவல நிலையினை எதிர்த்துப் போராடி உரிமைகளை மீட்டெடுக்க சங்க ரீதியாக ஊழியர்களை ஒன்றிணைப்பதே ஒரே வழி என்று தோழர் சம்பத் உணர்ந்தார்.

சென்னையில் தான் பணிபுரிந்து வந்த பேங்க் ஆப் இந்தியாவில் 1951ம் ஆண்டு ஊழியர்களை ஒன்றிணைத்து சங்கம் நிறுவினார் தோழர் சம்பத். அத்துடன் நில்லாது, பிற வங்கிகளில் பணிபுரிந்த ஊழியர்களையும் தொழிற்சங்கம் அமைத்திட வேண்டியதன் அவசியத்தினை உணர்த்தி பல்வேறு வங்கிகளில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கிளைகளைத் தோற்றுவித்தார்.

மேலும் தமிழகத்தில் செயல்பட்டுவந்த அனைத்து வங்கி ஊழியர் சங்கங்களையும் ஒன்றிணைத்து 1953ம் வருடம் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் என்ற அமைப்பினை உருவாக்கினார் தோழர் சம்பத். அது முதற்கொண்டு, தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் ஒப்புயர்வற்ற தலைவராக விளங்கிய தோழர் சம்பத் அவர்கள், 1958ம் வருடம் முதல் 1994ம் ஆண்டு வரையிலும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக தொடர்ந்து தேர்வு செய்யப்பெற்று சம்மேளனத்தின் ஒப்பற்ற தலைவராக உயர்வு பெற்றார்.

இளைஞர்கள் தொழிற்சங்கத் தலைவர்களாக உருவாகவேண்டும் என்ற உயர்வான நோக்கத்தில், 1994ம் ஆண்டு தாமாகவே முன்வந்து பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார் தோழர் சம்பத். 1994ல் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவராகவும், பின்னர் 2010ம் ஆண்டு அவைத் தலைவராகவும் பொறுப்பேற்று புகழ்மிக்க தலைவராக செயலாற்றினார் தோழர் சம்பத்.



நாடு முழுவதிலுமுள்ள பேங்க் ஆப் இந்தியாவில் செயல்பட்டுவந்த நம் சங்கங்களை ஒன்றிணைத்து அகில இந்திய சம்மேளனத்தினை தோற்றுவித்தார் தோழர் சம்பத். பேங்க் ஆப் இந்தியா வங்கியில் ஊழியர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய தோழர் சம்பத் அவர்கள், 1979ம் ஆண்டு முதல், அவர் தனது வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற 1986ம் ஆண்டு வரை பேங்க் ஆப் இந்தியாவின் நிர்வாகக் குழுவில் ஊழியர் பிரதிநிதியாக (WORKMEN DIRECTOR) திறம்பட செயல் புரிந்தார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தில் ஆரம்பகாலம் தொட்டு தீவிரமாக தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றிய தோழர் சம்பத், 1954ல் சென்னையில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஆறாவது அகில இந்திய மாநாட்டினை அனைவரும் வியக்கும் வண்ணம் நடத்திக் காட்டினார்.

1956ம் வருடம் கொல்கத்தாவில் நடைபெற்ற AIBEA வின் எட்டாவது மாநாட்டில் மத்தியக் குழு உறுப்பினராகவும், 1964ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மாநாட்டில் AIBEA வின் உதவிச் செயலாளராகவும், 1985ம் ஆண்டு பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டில் செயலாளராகவும் பின்னர் 1996ல் கொல்கத்தாவில் நடந்த அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொன்விழா மாநாட்டில் அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன் பின்னர், 2001ம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற மாநாட்டில், இளைஞர்கள் தலைமைப் பொறுப்பேற்கவேண்டும் என்ற நோக்கில், தாமாகவே முன்வந்து தலைமைப் பொறுப்பிலிருந்து விலகி மத்திய குழு உறுப்பினராக செயல்புரிய முடிவெடுத்தார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் வடிவமைத்து செயல்படுத்துவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட தோழர் சம்பத் அவர்கள், ஏழாவது இருதரப்பு ஒப்பந்தம் வரை அனைத்து ஒப்பந்தங்களின் வடிவாக்கத்திலும் அவற்றின் கணக்கீடுகளிலும் அளப்பரிய உதவிகளை ஆற்றியது என்றென்றும் நினைவு கூரத் தக்கதாகும்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் அனைத்துப் போராட்டங்கள், பிரச்சார இயக்கங்கள் மற்றும் சங்கத்தின் முக்கிய முடிவுகள் எடுப்பது மற்றும் ஆலோசனை வழங்குவது ஆகியவற்றில் தோழர் சம்பத் அவர்களின் பங்கு அளப்பரியதாகும்.

தமிழகத்திலிருந்த கூட்டுறவுத் துறை ஊழியர்கள் அனைவரையும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கீழ் ஒன்றிணைத்து வலிமையான சங்கத்தினை கட்டமைத்தது தோழர் சம்பத் அவர்களுடைய சாதனையாகும். அகில இந்திய கூட்டுறவு ஊழியர் சம்மேளனத்தின் முக்கிய ஆலோசகராகவும் அதனை வழி நடத்துபவராகவும் தோழர் சம்பத் திகழ்ந்தார்.

வங்கித்துறை ஊழியர்களுக்காக மட்டுமின்றி, சமுதாயத்தின் பிற அமைப்புகளில் பணியாற்றிய ஊழியர்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்துப் போராடுவதில் முழுவதும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் தோழர் சம்பத். அறுபது வருடங்களுக்கும் மேலாக அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் மற்றும் இந்திய பொதுவுடைமை இயக்கத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு தொழிலாளர்களை சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அவர்களுடைய உரிமைகளுக்காக அல்லும் பகலும் பணியாற்றினார் தோழர் சம்பத்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் முன்னோடித் தலைவர்கள் அனைவருடனும் சங்கப் பணிகளில் ஒன்றிணைந்து பணியாற்றிய முக்கியத் தலைவராக தோழர் சம்பத் விளங்கினார்.

தோழர் பிரபாத்கர் மறைவிற்குப் பின் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்ற தோழர் தாரகேசுவர் சக்ரவர்த்தி அவர்களுக்கு ஸ்தாபன நடவடிக்கைகள் பலவற்றுக்கும் ஆலோசனைகள் வழங்கி உறுதுணையாக விளங்கினார் தோழர் சம்பத் அவர்கள்.

சங்கத்தின் எந்தவொரு நிகழ்வும் நடவடிக்கையும் துல்லியமாகவும், அர்ப்பணிப்புடனும் அனைத்து உறுப்பினர்களின் ஒன்றுபட்ட ஈடுபாட்டுடனும் நடைபெற வேண்டும் என்ற குறிக்கோளில் எப்போதும் உறுதியாக இருப்பவர் தோழர் சம்பத். வங்கிகளில் புதிதாக இணைந்த இளம் தோழர்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றி, அவர்களை சங்கத்தின் பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுத்து, சங்கத்தினை எப்போதும் துடிப்புடன் செயல்படுத்திட வேண்டும் என்ற உயர்வான நோக்கம் உடையவர் தோழர் சம்பத்.


வயது முதிர்ந்த காலத்தில்கூட அவர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் புதிய தொழில்நுட்பங்களை எவ்வாறு உபயோகிப்பது என்று உணர்ந்திட கணினி செயல்பாடு போன்றவற்றை கற்றுணர ஆர்வம் கொண்டவராக விளங்கினார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் என்றென்றும் நேர்மையாகவும், கண்டிப்புடனும் செயலாற்றுபவராக இருந்த தோழர் சம்பத் அவர்களுடைய ஆலோசனைகளை, பிற துறைகளில் செயல் புரிந்து வந்த சங்கத் தலைவர்கள் மிகுந்த மதிப்பளித்து அவை மூலம் பயன்பெற்றனர்.

தோழர் சம்பத் அவர்களின், வங்கி ஊழியர் பணிவிதி முறைகள் பற்றிய முழுமையான அறிவாற்றல் மற்றும் தீர்க்கமான வாதங்களை இந்திய வங்கிகள் சங்க நிர்வாகிகள் பலமுறை பாராட்டி வியந்துள்ளனர். வங்கி ஊழியர்களின் பணிவிதி முறைகள் பற்றி தோழர் சம்பத் அவர்கள் தொகுத்து வெளியிட்ட **JOURNEY SO FAR** புத்தகம், பல பிரதிகள் அச்சிடப்பட்டு ஊழியர்களுக்கு மிகவும் உபயோகமாக இன்றளவும் விளங்குகின்றது.

தோழர் சம்பத் அவர்களின் தொழிற்சங்க பணிகளில் எளிமை, தியாக மனப்பாங்கு, தீர்க்கமான செயல்பாடு ஆகிய பண்புகள் என்றென்றும் அனைவரின் பாராட்டுக்கு உரியது. சுமார் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்திற்கும், பிற சகோதர தொழிற்சங்க இயக்கங்களுக்கும் தோழர் சம்பத் ஆற்றிய அளப்பரிய சேவை காலந்தோறும் நினைவுகூறத் தக்கதாகும்.

தோழர் சம்பத் மறைந்த இந்நாளில், அவர் உருவாக்கிச் சென்ற பெருமைமிகு நமது சங்கத்தினை போற்றிப் பாதுகாப்பதுடன், அவருடைய உயரிய நோக்கமான ஊழியர்களிடையே பரந்துபட்ட ஒற்றுமையினைக் கட்டமைத்து, இளம் தோழர்களை பெருமளவில் சங்கப்பணிகளில் ஈடுபடுத்தி, அவர்களுக்கு சங்கப் பொறுப்புகளில் வாய்ப்பளித்து நம் ஸ்தாபனத்தினை மேலும் வலிமையாக்கிட உறுதி ஏற்போம்.



தனியார்துறை வங்கி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பின்
மாநிலம் தழுவிய தர்ணா - கரூர் - **03-11-2025**

DEARNESS ALLOWANCE FOR THE MONTHS OF NOVEMBER, DECEMBER 2025 & JANUARY 2026 FOR COMMERCIAL BANK EMPLOYEES
FOR SERVING EMPLOYEES – 23.93 % OF PAY (INCREASE OF 2.80 %)
NO CHANGE IN DA RATES FOR PENSIONERS